# ஐந்திறம்



வெளியீடு

**தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்**

"தென்மொழி தென்சொல் தென்புலம் தென்னிலம்
தென்கலை யியலாய் மக்கள் மொழியும்
நன்மொழி செந்தமிழ் விண்தமிழ் ஒளியாய்
தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே

தண்டமிழ் மொழியே ஐந்தியல் மொழியாய்
விண்டுறும் கலைத்தொழில் விளங்குறும் தொன்னெறி
மரபியல் செறித்தும் எண்கலை நிலைத்திறன்
வரம்புறும் இயலே ஐந்திற மெய்நூல்."

# ஐந்திறம்

நூலாசிரியர்

**பழந்தமிழ்ச்சிற்பி**

**மயன்**

வெளியீடு

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

தமிழ்நாடு, சென்னை 600 025

Deluxe edition Rs. 65/-
Cheap edition Rs. 55/-

முதல் வெளியீடு, ஏப்ரல் 1986

© தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

எல்லா உரிமைகளும் வெளியிட்டோர்க்கு மட்டுமே

இந்த நூலை முழுமையாகவோ அல்லது இதன் பகுதிகளையோ வெளியிட்டோரின் அனுமதி இல்லாமல் எவ்விதமாகவும் மறுபிரதிகள் எடுக்க அனுமதிக்கப்படாது.

அச்சிட்டோர்

அச்சுத் தொழில் நுட்பப் பயிலகம்

தரமணி, சென்னை 600 113

# அணிந்துரை

உலக மொழிகளிலே தமிழ் மொழி மூத்த மொழியென சொற் பிறப்பியல் ஆய்வாளர் கூறுவர். எனவே மொழி வழிப்பட்ட தமிழர்தம் நாகரிகமும், பண்பாடும் மிகத்தொன்மையுடையதென உறுதி செய்வர்.

அக்கருத்தின் அடிப்படையில் புலவர் பெருமக்களும் பன்னாட்டு ஆய்வாளர்களும் பல முனைகளிலே பல ஆய்வு களைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

இந்திய நாட்டின் வரலாறே தெற்கிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டுமென்று பலர் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். அதற்கான வரலாற்றுக் குறிப்புகளைக் கண்டறியவும் முற்பட்டிருக்கின்றார்கள். பல தடயங்களைப் பெற்றுமிருக்கின்றார்கள். தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திக் கொண்டுமிருக்கின்றார்கள்.

இக்காலக் கட்டத்தில் 'ஐந்திறம்' என்ற நூலொன்று கிடைத்திருக்கின்ற செய்தியானது அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி யூட்டுவதாக அமையும் என்று கருதுகிறேன்.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அந்நூல் ஆசிரியர் தன் நூலுக்கு அடிப்படையான தொல் நூலொன்றைக் குறிப்பிடுகின்றார். அந்நூல் "ஐந்திரம்" என்று அங்கே குறிப்பிடப்படுகிறது. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்" என்பது அந்நூலில் காணப்படும் சொற்றொடர். அதற்கேற்ப "ஐந்திறம்" என்ற தலைப்பில் ஒரு தொந்நூலானது தஞ்சை, சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் குவிந்து கிடந்த சுவடித் தொகுப்பிலே இருக்க, அதனை ஒரு புலவர் பெருமகன் தன் மாணவப் பருவத்தில் மனப்பாடம் செய்துள்ள செய்தியினைக் கேட்டு அகமகிழ்ந்து, எழுதச்செய்து அந்த நூலை பல அறிஞர்

பெருமக்களிடமும் ஆய்வாளர்களிடமும் காட்டி, ஒப்புதலும் பெற்று, இன்று அச்சேறிய நூலாக, அது தமிழ்ப் பெருமக்களிடம் பெருமகிழ்ச்சியுடன் வழங்கப்படுகிறது.

'ஐந்திறம்' ஓர் இலக்கண நூல். மொழி இலக்கணமாக முதலில் தொடங்கி, அங்கே பல்கலை இலக்கணங்கள் விரிவாக பேசப்படுகின்றன; அவ் இலக்கணங்களுக்கு அடிப்படையான உளவியலும், அறிவியலும், கணக்கியலும், கலையியலும் அதில் காணப்படுகின்றன.

உளத்தில் தோன்றிய உணர்வானது விண்ணாகி, ஒளியாகி, வெளிப்பட்டு, வளியினால் அசையாகி, ஓசையாகி ஒலியாகி மொழியாகிற படிமுறையொன்றும் பேசப்படுகின்றது. மொழி இலக்கண நூல் ஒன்று இங்ஙனம் பேசுவது வியப்பினும் வியப்பல்லவா? இஃதொரு அறிவியல் நுட்பமல்லவா? சொற்பிறப்பியல் ஆய்வறிஞர்கட்கு நல்லதொரு விருந்தாகுமல்லவா?

இந்த நூலில் மொழியிலக்கணமட்டுமல்லாது சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை பற்றிய பல்கலை இலக்கணங்களும் அறிவியல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மேலும் விண்கலம் மரக்கலம்–செய்முறை பற்றிய இலக்கணக் குறிப்புகளும் இடம் பெறுகின்றன.

அவற்றை பல்துறையில் ஆழ்ந்த புலமையும் ஆய்வனுபவமும் பெற்ற மூதறிஞர்கள் படித்துப்பார்த்து அவற்றின் நுட்பங்களை ஆய்ந்து, மக்களுக்கு அவற்றின் பயனையும் பெருமையையும் வெளியிட வேண்டுமென்று கருதி இப்போது அந்நூலின் மூலப் பாடல்களை மட்டும் அரசு வெளியிடுகிறது. தொடர்ந்து பிற கலை நூல்களின் மூலப்பாடல்கள் வெளியிடப்படும்.

இந்த நூலின் மிகச் சிறப்பாக காணப்படுவன காலம் மற்றும் இடம் ஆகிய இரு பெரும் அறிவியல் நுட்பங்கள் விளக்கப்படுவதேயாகும். உள்ளமே இடம்; அதன் துடிப்பே காலம். இடமே வடிவங்களைத் தோற்றுவிக்கின்றது. காலமே மொழியைப் படைக்கின்றது. இடமும், காலமும் பொருளையே

தோற்றுவிக்கின்றன. கண்ணால் பார்க்கப்படுவது இடம் தோற்றிய ஒளிப்பொருள். காதால் கேட்கப்படுவது காலம் தோற்றிய ஒலிப்பொருள். ஒலிப்பொருளில் பொருள் மறைந்து நிற்கும், அதாவது உணர்வாகும். ஒளிப்பொருள் பருப் பொருளாக நிற்கும். ஒலிப் பொருள், சொற்பொருள் என்ற பிண்டத்தில் நிகழ்வதே அண்டத்திலும் நிகழ்கிறது. இவை யெல்லாம் இந்நூலினின்று வெளிப்படும் புது விளக்கங்கள். இக்கருத்துக்களை ஆய்வாளர்களின் ஆர்வத்தைத் தூண்டு வதற்காகக் குறிப்பிடுகிறேன்.

இந்நூலைத் தந்தவர் சமயத்துறையில் கருமாரி தாசர் என்று புகழ்பெற்ற புலவர் வீரபத்திரனார் ஆவர். அவர் பத்து லட்சம் தமிழ்ப் பாடல்களை மனனம் செய்து வைத்திருப்பதில் $2\frac{1}{2}$ லட்சம் பாடல்கள் ஒலிப்பதிவாகியும், ஒரு சில தட்டச்சு செய்திருக்கும் நிலையிலும் உள. அன்னாரின் நினை வாற்றலையும் அப்பாடல்களை விரைந்து அவர் பாடுவதையும் கேட்டு வியப்படைந்தேன். அவர்தம் ஆற்றலை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் பாராட்டு வதோடு, இதற்கு ஊக்கமளித்து பாடல்களை வெளிக் கொணரச் செய்த தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களையும், பத்தே நாட்களில் மிகச் சிறந்த முறையில் அச்சேற்றி வெளிக் கொணர்ந்த அரசினர் அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தினரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

நாள் 10–4–1986
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009

(ஒப்பம்) செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு